செய்தி வெளியீடு எண்: 684 நாள்:09.10.2019

# ஆதிதிராவிடர் இனப் பட்டியலில் உள்ள 6 உட்பிரிவுகளை ஒன்றிணைத்து, தேவேந்திர குல வேளாளர் என அறிவிப்பது குறித்து கோரிக்கைகளை பெற தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட உயர்மட்ட குழுவின் தொடர் கூட்டம்

ஆதிதிராவிடர் இனப் பட்டியலில் உள்ள குடும்பன், பண்ணாடி, காலாடி, கடையன், தேவேந்திரகுலத்தான், பள்ளன் ஆகிய 6 உட்பிரிவுகளையும் ஒன்றிணைத்து "தேவேந்திரகுல வேளாளர்" என்று அழைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஆய்வு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், சட்டத் துறை செயலாளர் ஆகியோரை உறுப்பினராகவும் மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை இயக்குநரை உறுப்பினர்–செயலாளராகவும் கொண்ட குழு அரசாணை (நிலை) எண் 21, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நாள் 04.03.2019–ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் முதல் அலுவலர்கள் கூட்டம் (First Internal Meeting) 4.3.2019 அன்று அதன் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இக்குழுவின் முதல் விசாரணை கூட்டம் சென்னை ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் 7.3.2019 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் தேவேந்திரர் தன்னார்வ அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் திரு. ம. தங்கராஜன், சென்னை பல்கலைக்கழக மானுடவியல்

துறை பேராசிரியர் திருமதி. எஸ். சுமதி, ஊட்டி பழங்குடியினர் ஆராய்ச்சி மைய இயக்குநர் திரு. ப. சுப்ரமணியம் மற்றும் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி திரு. இரா. கிருஸ்துதாஸ் காந்தி, உலக தமிழர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் திரு. அக்கினி சுப்ரமணியன் ஆகியோர் தங்கள் கருத்துகளை பதிவு செய்து உரிய ஆவணங்களையும் தாக்கல் செய்தனர். இது தவிர பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்கள், தனி நபர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளிடமிருந்து 274 மனுக்கள் பெறப்பட்டு ஆய்வுசெய்யப்பட்டு வருகிறது.

இவ்விசாரணையை தொடர்ந்து இக்குழுவின் இரண்டாம் கட்ட விசாரணைக்காக மனு அளிக்க விருப்பமுள்ளவர்கள் சென்னையிலுள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் அக்டோபர் 16 ஆம் தேதி காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும் மதியம் 2 மணி முதல் 4 மணி வரையிலும் குழுவின் முன் ஆஜராகி, தங்கள் கருத்துகளையும், ஆவணங்களையும் நேரில் சமர்ப்பித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**